முக்கிய வார்த்தைகள்:
*கற்பிக்கவும் / வழிகாட்டவும் / வளர்க்கவும்*
*உள்ளம் / ஆன்மா*
*உபகாரம்/கிருபை*
*சரிசெய்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**05 செப்டம்பர் 2025 / 12 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1447**

# <u>ஆன்மாக்களின் ஆசிரியர்: இறைத்தூதுதரின் வளர்ப்பு</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ وَٱلْإِيمَانِ، وَأَرْسَلَ رَسُولَهُ بِٱلْهُدَىٰ وَٱلْإِحْسَانِ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُوْنَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

தக்வா [இறை பக்தி] அல்லது அல்லாஹ்வைப் பற்றிய உணர்வைப் பெற்றுத் திகழுங்கள்! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்க ளிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பிறந்த மாதத்தை முன்னிட்டு, அவர்களின் போதனையை நமது அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவதன் மூலம், அவர்கள் [ஸல்] மீதான நமது அன்பை நிரூபிப்போமாக! ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் மீது நாம் அன்பு கொண்டுள்ளதற்கு, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா சாட்சியாக இருப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் மரியாதையுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரசூலுல்லாஹி [ஸல்] அவர்கள், அனைத்து படைப்புகளுக்கும் தூதராகவும் கிருபையாகவும் அனுப்பப்பட்டார்கள் என்பதுடன், ஆன்மாக்களை வளர்த்துப்

போஷிக்கும் ஆசிரியராகவும் அவர்கள் அனுப்பப்பட்டார்கள் எனும் செய்தி உண்மையானதா? என நாம் சிந்திக்க வேண்டும்.

உண்மையில், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், ஆன்மாக்களையும் உள்ளங்களையும் வளர்த்துப் போஷிக்கும் ஆசிரியராகவும் அனுப்பப்பட்டார்கள். அவர்களின் வழிகாட்டுதல் மனிதகுலத்தை இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கமும், தவறான வழிகாட்டுதலிலிருந்து வல்லமைமிக்க ஏக இறைவனாகிய அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையின் பக்கமும் அழைத்துச் செல்வதாக இருக்கின்றது.

இக்கருத்தை, திருக்குர்ஆனின் "அல்-ஜுமுஆ" எனும் அத்தியாயத்தின் 2-வது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

هُوَ ٱلَّذِى بَعَثَ فِى ٱلْأُمِّيِّـۧنَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا۟ عَلَيْهِمْ ءَايَـٰتِهِۦ
وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ ٱلْكِتَـٰبَ وَٱلْحِكْمَةَ وَإِن كَانُوا۟ مِن قَبْلُ لَفِى
ضَلَـٰلٍ مُّبِينٍ ٢

பொருள்: அவன்தான் [அல்லாஹ்], எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக் காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கின்ற தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்; அந்த மக்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தார்கள்.

**அன்பிற்கும் மரியாதைக்குமுரிய ஜமாஅத்தார்களே!**

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் ஒரு பயிற்றுவிப்பாளர் மற்றும் வளர்த்துப் போஷிப்பவர் எனும் ரீதியில், அவர்கள் ஆற்றிய முக்கியப் பங்களிப்பைச் சுட்டிக் காட்டுகிறது. அவர்கள், தனது மக்களை அவற்றின் மூலம் ஆற்றல்மிக்கவர்களாக

ஆக்கினார்கள். மேலும், நாம் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் மிகச் சிறந்த வாழ்க்கை வரலாற்றில் சிந்தனை செய்து பார்த்தால், அவர்கள் மக்களுக்கு இஸ்லாமியப் போதனைகளை மட்டும் எடுத்துரைக்கவில்லை; மாறாக, அத்துடன், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் தனது நன்னடத்தையின் மூலம் மனிதர்களின் உள்ளங்களை வெற்றிகரமாகத் தொட்டு, அவற்றில் இடம் பிடித்தார்கள்; அவர்களைச் சந்தித்த அனைவரிடமும் மிகச் சிறந்த தாக்கத்தை ஆழமாக ஏற்படுத்தினார்கள்.

உதாரணமாக, நபித்தோழர் அனஸ் பின் மாலிக் [ரலி] அவர்கள் சுமார் 10 வயதாக இருக்கும் போது இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களைச் சந்தித்தார்கள். அப்போது முதல் 10 ஆண்டுகள் இறைத்தூதர்[ஸல்] அவர்களுக்குச் சேவை செய்தார்கள். இந்த இளம் வயதில் இறைத்தூதர்[ஸல்] அவர்களுக்கு நெருக்கமாக இருக்கும் பாக்கியத்தை அவர்கள் பெற்றதோடு, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் நேரடியான வழிகாட்டுதலையும் பெற்று வந்தார்கள்.

இந்நிலையில், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களைப் பற்றி செய்யிதினா அனஸ் பின் மாலிக் [ரலி] கூறும் போது: "பிள்ளைகள் மீது மிக அதிகமாகக் கிருபை கொள்பவர்களாக, இறைத்தூதர்[ஸல்] அவர்களை விட வேறு யாரையும் நான் கண்டதில்லை" எனக் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**
ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் எந்த சிறப்புத் தன்மைகள், அவர்களை இந்த அளவுக்கு ஆக்கப்பூர்வமான ஆசிரியராகவும், உள்ளங்களையும் ஆன்மாக்களையும் சிறப்பாக வளர்த்துப் போஷிப்பவராகவும் ஆக்கியது? என நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**முதலாவதாக, உபகாரம் மற்றும் கருணைச் சிந்தனையுடன் பயிற்றுவிப்பது.**

ஆக்கப்பூர்வமாக வளர்த்துப் போஷிப்பதற்கு, திறந்த உள்ளங்கள் அவசியமாகும் என்பதை ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே, எப்போதும் அவர்களின் அணுகுமுறை உபகாரச் சிந்தனையாலும் கிருபையாலும் நிரப்பமாகக் காணப்பட்டது.

உதாரணமாக, ஒரு மனிதர் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களிடம் வந்து, இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ள விபச்சாரம் புரிவதற்கு எனக்கு அனுமதி தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்தத் தவறான வேண்டுதலுக்கு ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் எப்படிப் பதிலளித்தார்கள்? அவர்கள் தனது சப்தத்தை உயர்த்தி, அந்த மனிதரைத் திட்டினார்களா? அல்லது பொதுமக்களுக்கு மத்தியிலோ அல்லது வேறு ஏதாவதொரு வகையிலோ அவரைக் கேவலப்படுத்தினார்களா? நிச்சயம் இல்லை.

மாறாக, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், அவருக்கு அமைதியாகவும் நுட்பமாகவும் பயிற்றுவித்தார்கள். அவர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், அவர் சம்பந்தப்பட்ட சில உதாரணங்களைக் கூறினார்கள். பின்பு ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் தனது புனிதமான கரத்தை அவரது நெஞ்சின் மீது வைத்து, அவருக்காக மனமுவந்து பிரார்த்தனை செய்தார்கள். இவையனைத்தையும் அமைதியான, பாதுகாப்பான, மேலும், கிருபையால் நிரம்பிய சூழ்நிலையில் செயல்படுத்தினார்கள்.

**இரண்டாவதாக: தான் வழிகாட்டும் நபர்களின் நிலைமைகளை அறிதல்.** ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், பார்வையாளர்கள் மற்றும் கேட்பவர்களுக்குப் பொருத்தமான வார்த்தைகளையே எப்போதும் பயன்படுத்துபவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு இறைத்தூதராகவும் சமுதாயத்தின் தலைவராகவும், அதிகமான பொறுப்புகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவராகவும், உயர் பதவியைப் பெற்றவராகவும் இருந்த போதிலும், மற்றவர்களிடம் பேசும் போது, குறிப்பாக, பிள்ளைகளிடம் பேசும் போது தனது அணுகுமுறையை அவர்களுக்குத் தக்க சரிசெய்து கொள்பவராக இருந்தார்கள்.

உதாரணமாக, அபூஉமைர் எனும் பெயருடைய ஒரு சிறுவனையும் அவனிடம் ஒரு செல்லப் பறவை இருந்ததையும் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் அறிந்திருந்தார்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அச்சிறுவனைச் சந்திக்கும் போதெல்லாம், அவனது செல்லப் பறவையைப் பற்றி விசாரிப்பார்கள். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் எத்தனையோ முக்கியமானக் கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களாக இருந்த போதிலும், சிறு பிள்ளைகளையோ அல்லது சமுதாயத்தில் முக்கியமற்ற நபர்களையோ சந்தித்துப் பேசுவதைப் புறக்கணிக்கவில்லை.

**அல்லாஹ்வின் பிரியத்திற்குரிய ஜமாஅத்தார்களே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், தனது சிறப்பான வளர்ப்பின் மூலம் ஸஹாபாக்கள் எனப்படும் தனது தோழர்களின் நடத்தைகளை மிகச் சிறப்பாக வடிவமைப்பதில் வெற்றி கண்டார்கள். ஸஹாபாக்களில் இளைஞர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையில் இருந்தார்கள். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், தனது கிருபை மற்றும் பொருத்தமான அணுகுமுறையின் மூலம் ஒரு ஆசிரியராக மட்டும் இருக்கவில்லை; மாறாக, அத்துடன், உள்ளங்களைத் தொட்டு அவற்றைச் சிறப்பாக வளர்த்துப் போஷிப்பவராகவும் இருந்தார்கள். நீடித்த, சிறந்த தலைமுறைக்கு அடித்தளமிட்டார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, ”ஹத்யுன் நபி” அதாவது, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலை உறுதியாகப் பற்றிப் பிடிக்கும் நபர்களாக நம்மை ஆக்குவானாக! அதன் மூலம், ஒருநாள் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்[ஸல்] அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பை நாம் பெறுவோமாக! மேலும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தமது சேவைகள் மற்றும் பங்களிப்புகளின் மூலம் உள்ளங்களைக் கவர்ந்த ஒவ்வொரு ஆசிரியருக்கும் வளர்த்துப் போஷிப்பவருக்கும் மிகச் சிறந்த வெகுமதிகளையும் அருள்களையும் வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இந்த செப்டம்பர் மாதத்தின் வரும் 8-வது தேதி, திங்கள் கிழமையின் அதிகாலையில் நாம் சந்திரக் கிரகணத்தைக் காண இருக்கின்றோம். 12: 27 am முதல் 3: 56 am வரைக் காணலாம். நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், கிரகணங்கள் அல்லாஹ்வின் மகிமையைச் சுட்டிக் காட்டும் அடையாளங்கள் என நம்புகிறோம். கிரகணத் தொழுகையை தனியாகவோ அல்லது ஜமாஅத்தாகவோ, வீட்டிலோ அல்லது பள்ளியிலோ நிறைவேற்றுமாறு நாம் ஆர்வமூட்டப்பட்டுள்ளோம். கிரகணம் நடைபெறும் போது பிரார்த்தனைகளை அதிகமாகச் செய்யுமாறு ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நவின்ற ஹதீது ஒன்றை, இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள் பின்வருமாறு பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

"கிரகணங்கள் நடை பெறுவதைக் கண்டால் தொழுகையில் ஈடுபட்டு, பிரார்த்தனை செய்யுங்கள்"

எனவே, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் "சுன்னாஹ்" எனும் வழிமுறையைப் பின்பற்றும் வாய்ப்பைத் தவற விட்டு விட வேண்டாம். முடிந்தால், விருப்பப்பட்டு நிறைவேற்றப்படும் கிரகணத் தொழுகையை நிறைவேற்றுங்கள்; அல்லது குறைந்த பட்ஷம் பிரார்த்தனைகளையும் வணக்க, வழிபாட்டுச் செயல்களையும் அதிகரித்துக் கொள்ளுங்கள்;

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது நற்காரியங்களை ஏற்றுக் கொள்வானாக! அவற்றில் அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.